விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 01 சனிக்கிழமை (16.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 352

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## வாகரைப் பகுதியிலிருந்து

# இடம் பெயர்ந்த மக்கள் பயணித்த படகுகள் கடலில் மூழ்கி விபத்து!

## குழந்தைகள் பெண்கள் உட்பட 13 பேர் பலி

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குட் பட்ட வாகரைப் பிரதேசத்திலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டு பகுதி நோக்கி இடம் பெயர்ந்த வர்கள் பயணம் செய்த படகுகள் சில விபத் துக்குள்ளானதில் குழந்தைகள் பெண்கள் உட் பட குறைந்தது 13 பேர் நீரில் மூழ்கி பலியாகி யுள்ளனர். வாகரையிலிருந்து கடல் வழியாக சுமார் 90 பேருடன் புறப்பட்ட 9 வள்ளங்களில் 7 வள்ளங்கள் மட்டுமே பாதுகாப்பாக சென்றடைந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஏனைய இரு படகு கள் நீரில் மூழ்கின. இச் சம்பவம் நேற்றுக் அதிகாலை 4.30 மணியளவில் இடம் பெற்றுள் ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படைமுகாம் மீது மோட்டார் தாக்குதல்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகள் நேற்று களுவாஞ் சிக்குடி விசேட அதிரடிப்படையினரின் முகாம் மீது மோட்டார் தாக்குதல் நடத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

எனினும் இத் தாக்குதலில் அதிரடிப்படை யினரின் முகாமிற்கு எதுவித சேதமும் ஏற் படவில்லை அங்கிருந்த மூன்று வீடுகள் இம் மோதலில் சேதமாகியுள்ளது. எனினும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித் துள்ளது. (ச)

## கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு இலங்கையின் சமாதானத்திற்கு பின்னடைவு



### எரிக்சொல் ஹெய்ம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோச கர் அன்ரன் பாலசிங்கத்தின் மரணம் இலங்கை அர சாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடை யேயான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் என நோர்வேயின் அமைச்சரும் சமாதான தூதுவருமான எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இனி வரும் காலகட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் இல்லாமல் சமாதான பேச்சுவார்த்தை தொடர்வது கடின மான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் இருந்து தொலைபேசியூடாக இந்தோ ஏசியன் செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய செவ் வியிலேயே இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கும் இடையேயான ஒப்பந்தம் 2002 ஆம் ஆண்டு கைச்சாத்தான பின்னர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மூன்று நாட்கள் துக்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான 'தேசத் தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் மறை வுக்கு மூன்று நாட்கள் துக்கம் கடைப்பிடிக் கப்படும் என தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று முதல் நாளை வரை யான நாட்க ளும் தாயகத்தில் துக்கம் கடைப்பிடிக்கப்படும். புலம்பெயர் நாடுகளில் செயற்படும் தமிழ் அமைப்புக்களும் தேசத்தின் குரலுக்கு மூன்று நாட்கள் துக்கம் கடைப்பிடிப்பதாக அறிவித் துள்ளன.

இறுதி நிகழ்வு (04 ஆம் பக்கம் பார்க்க)

## தன்னை வருத்திய நோயினும் கொடியது ஈழத் தமிழர் துயரம் என எண்ணி வாடியவர்

### பாலாவின் மறைவுக்கு கருணாநிதி அனுதாபம்

(சென்னை)

தன்னை வருத்திய நோயினும் கொடியது ஈழத் தமிழர் துயரம் என எண்ணி வாடியவர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் என்று தமிழ் நாட்டு முதலமைச்சர் கலைஞர் மு.கரு ணாநிதி தனது அனுதாப செய்தியில் தெரி வித்துள்ளார்.

முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் கூறி யிருப்பதாவது; தன்னை வருத்திய நோயி னும் கொடியது ஈழத் தமிழர்களின் துயரம் என எண்ணி வாடியவரும் உலகத் தமிழர் களின் உள்ளங்களைக் கொள்ளை கொண் டவரும் இலங்கை (04 ஆம் பக்கம் பார்க்க)

## அதிமுக்கியமான கட்டத்தில் தேசத்தின் குரலின் இழப்பு

### தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இரங்கல்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய இனத்தினுடைய அரசியல் போராட்டத்தில் அதிமுக்கியமான ஒரு கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரு மான 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத் தின் மறைவு தமிழ் மக்கள் மத்தியில் ஆழ்ந்த துக்கத்தை ஏற்படுத்துகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை வருமாறு; தமிழ்த் தேசிய இனத்தினுடைய அரசியல் போராட்டத்தில் அதிமுக்கியமான ஒரு காலகட்டத்தில் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு தமிழ் மக்கள் மத்தியில் ஆழ்ந்த துக் கத்தை ஏற்படுத்துகிறது.

பல தசாப்தங்களாக தமிழ்த் தேசியப் போராட்டம் வன்முறையின்றி அகிம்சை வழி யில் இடம் பெற்றது. தமிழ்த் தேசியப் பிரச்சி னை சமாதான முறையில் தீர்க்கப்படாமை, ஆயுதப் போராட்டம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகள் ஜனவரியில் கூடுகின்றன

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடு களின் பிரதிநிதிகள் ஜனவரியில் கூடவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒன்று கூடும் இந்த நாடுகள் இலங்கை யில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும் முக்கியமாக ஆராயவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி யின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது இலங்கையில் முன்னெடுத்து செல்லப்படும் பத்து ஆண்டு கள் தொடர்பான திட்டங்களும் ஆராயப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-133)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அன்ரன் பாலசிங்கத்துக்கு இரங்கல்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம்

சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்துவிடுவதில்லை. அவர்கள் எமது தேசத்தின் ஆன்மாவில் என்றும் எப்போதும் நீங்காத நினைவுகளாக காலமெல்லாம் நிலைத்து நிற்பார்கள் என்று தமிழீழத் தேசியத் தலைவரின் அரசியல் சித்தாந்தத்தை நெஞ்சமதில் நிறுத்தி அந்த வாழ்க்கையின் வழி நின்று வாழுந்து வழி காட்டியவர் செந்தமிழ்ச் செம்மர் 'தேசத்தின் குரல்' மானிடத்தின் மாமேதை அமரர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வைத்துக் கொண்டு அந்த உயரிய இலட்சியத்துக்காக பெரும் பணியாற்றிய ஒரு உன்னதமான உயர்ந்த மனிதனை இயற்கை பலி கொண்ட செய்தி தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஆழ் மனதில் ஒரு பூகம்ப அதிர்வாகவும் தமிழ்த் தேசிய ஆன்மாவை ஒரு உலுப்பு உலுப்பியிருக்கின்றது.

தமிழர் வாழ்விலும் வரலாற்றிலும் பின்னிப்பிணைந்த மாமேதை அமரர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் என்றும் எப்போதும் குன்றின் மேல் ஒளியாகவும் குவலயத்தின் ஒலியாகவும் என்றும் எம் தேசத்தின் குரலாகவும் திகழ்வார் என்ற அதி நம்பிக்கையுடன் அவர் தம் வழி தடம் பற்றி எமது இலட்சியப் போராட்டம் தலைவர் வழி தொடரும் என்ற உறுதியுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களை எம்மினிய மக்களுக்கும் அவர்தம் துணைவியருக்கும் காணிக்கையாக்குகின்றோம்.

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

தமிழனினத்தின் விடியலுக்காய் வீறுகொண்டெழுந்த விடுதலைப் போராட்ட வரலாற்றிலே தனக்கென ஒரு இடம் பிடித்து தேசம் எங்கும் எதிரொலித்த ஒரு குரல் ஓய்ந்து விட்டது. சிறந்த கல்வியியலாளனும் தத்துவராசிரியரும் அரசியல் ஆலோசகராகவும் திகழ்ந்த 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ்த் தாய் மூச்சோடு இரண்டறக் கலந்து விட்டார்.

மூன்று தசாப்த கால விடுதலைப் போராட்ட வரலாற்றிலே விடுதலையை வீச்சாக்கக் கூடிய வகையிலும் விரைவுபடுத்தும் வகையிலும் தேசியத் தலைவருக்கு உற்ற தோழனாகவும் விடுதலைப்போராட்டத்துக்கு வழிகாட்டியாகவும் தமிழரின் உரிமைக்காக குரல் கொடுத்த உத்தரமராகவும் திகழ்ந்தவர் 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கம்.

அன்னாரது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று. அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தமிழ் மாணவர் ஒன்றியம்

தாயக விடுதலைப் பயணம் கரடுமுரடான பாதைகளைக் கடந்து தன் முடிபினைக் காணும் தறுவாயில் நிற்கின்றது. இலட்சியம் குன்றிடாத இலட்சியப் புருசர்களை இழந்த தாயக தேசத்துக்கு சோகங்களையும் துயரங்களையும் தாங்கி விடுதலைலையை வென்றெடுக்கும் வீறாப்பு மிக்க உணர்வோடு வாழும் தமிழ்மக்களுக்கு பேரிடியாய் பேரிழப்பாய் அமைந்திருக்கின்றது கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு.

இடியோசை கேட்ட நாகம்போல தமிழ் பேசும் மக்கள்அனைவரும் அதிர்ச்சியிலும் ஆற்றொணா துயரிலும் ஆழ்ந்துள்ளனர். அன்னார் இழப்பென்பது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. தாங்க முடியாத சோகத்தைத் தந்த வீரச் சாவு நிகழ்வு மாணவர்களாகிய நாம் 'தேசத்தின் குரல்' கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கு எமது இதய அஞ்சலிகளை தெரிவிப்பதோடு அவரின் பாதையில் பயணத்தைத் தொடர உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.

## இடதுசாரி முன்னணி

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை முதன்முதலாக நான் 1978 இல் லண்டனில் சந்தித்தோம். இச் சந்திப்பு ஒருபேரணியில் கலந்து கொண்ட போதே ஏற்பட்டது. எம்முடன் நட்பாகப் பழகிய அன்ரன் பாலசிங்கம் எம்மை தம்து வீட்டுக்கு அழைத்திருந்தார். நாம் அவரது வீட்டிற்குச் சென்றபோது எமக்கு விருந்து வழங்கியதுடன் தமிழ்த் தேசியப் பார்வையுடைய சுயநிர்ணய உரிமை தொடர்பான ஆவணத்தை எமக்கு அவர் வழங்கினார்.

இவரின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றுக் கொடுத்தது. கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஒரு புரட்சிகர தமிழ்த் தேசியவாதியாவார்.

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

தமிழ் மக்களுடைய அபிலாசைக்கான நியாயப் போரிலே வரலாற்றுத் திருப்பம் ஒன்றை எதிர்பார்த்திருக்கும் வேளையில் ஏற்க முடியாத ஈடுசெய்ய முடியாத இழப்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின்இழப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களுடைய பல தசாப்த கால அமைதி வழி மற்றும் ஆயுத வழிப் போராட்டத்தை ஆழ உணர்ந்தவராகவும் அப்போராட்டத்துக்கான ஆலோசனைகளையும் நியாயப்பாடுகளையும் ஆத்மாத்த ரீதியாக வெளிப்படுத்திய ஒருவரே அமரர் அன்ரன் பாலசிங்கம்.

எமது போராட்டத்துக்கான தலைமையில் ஆத்ம சகாவாகவும் ஆலோசனை வழங்குநராகவும் ஆரம்பம் தொட்டுச் செயற்பட்ட 'தேசத்தின் குரலான' அன்ரன் பாலசிங்கம் அவர்களது கால மறைவுக்கு எமது மாணவர்கள் சார்பில் அஞ்சலிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். (சு)

## சிறுவிளம்பரம்

### மணமகள் தேவை

அரச வங்கியொன்றில் பணிபுரியும் முப்பது வயதுடைய உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. யாழ்.இந்து.சதய நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்றவர், மொத்த கிரக பாவம் ஒன்றேமுக்கால். மே[illegible]ா. வலம்புரி, விளம்பர இல.140, யாழ்ப்பாணம். அ.சோமபாலன், 35,மாரியம்மன் ஒழுங்கை,திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். (679)

## அங்கவீனர்களுக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அங்கவீனர் தினத்தை முன்னிட்டு இன்று காலை 9 மணிக்கு வலி.கிழக்குக் கோப்பாய் பிரதேச மண்டபத்தில் 18 வயதுக்குட்பட்ட 200 அங்[illegible]வீனர்களுக்கு யாழ். கரித்தாஸ்-கியூடெக் அமைப்பின் அனுசரணையுடன் பெற்சீற், சவர்க்கார வகைகளும் 18 வயதுக்குட்பட்ட 75 அங்கவீனர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு , யுனிசெவ்,யு.என்.எச்.சி.ஆர். அனுசரணையுடன் சவர்க்காரம், சீப்பு, பெற்சீற், பாடசாலைப் பை , துவாய் முதலிய பொருள்களும் அன்பளிப்பாக வழங்கப்படும் என வலி.கிழக்குக் கோப்பாய் சமூக சேவைகள் அலுவலர் வே.தபே[illegible]திரன் அறிவித்துள்ளார். (து)

## பால்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட குழந்தைகளுக்கான இலவ[illegible] அங்[illegible]ர்-3+ பால்மா [illegible]நியோகம் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் விநியோகிக்கப்படவுள்ளது.

சகல மூன்று வயதுமுதல் ஐந்து வயதுக்கு[illegible]ட குழந்தைகளுக்கு வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள[illegible]ாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸ் அறிவித்துள்ளார்.

18 ஆம் திகதி யூபிலி மக.நி.ஆத்[illegible]ரிசூடி சிகிச்சை நிலையத்திலும் 19 ஆம் திகதி பாசையூர், குருநகர் சி.டி.எம்.எச்சிலும் 20 ஆம் திகதி சுவாமியார் வீதி நல்லூர் சிகிச்சை நிலையத்திலும்,

21 ஆம் திகதி நாவலர் வீதி மகப் பேற்[illegible] நிலையம், அரியாலை மகப்பேற்று நிலையம் ஆகியவற்றிலும்22 ஆம் திகதி கொட்டடி, வண்ணார் பண்ணை சி[illegible]ச்சை நிலையம் ஆகியவற்றிலும் வழங்கப்படவுள்ளது. (சு)

## 2 ஆயிரம் [illegible]ாதுமக்கள் அரச [illegible]குதிக்கு இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

வாகரையில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளதாக பாதுகாப்புத் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இ[illegible]யிரத்து 300 பேர் விநாயகபுரத்திலும் 700 பேர் மாங்கேணியிலும் [illegible]ற்காலிகமாக தங்கியிருப்பதாக அந்த மையம் தெரிவித்துள்ளது. (சு-133)

## பிரார்த்தனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சாந்தியும் சமாதானமும் வேண்டுமென இறைவனை வேண்டும் ஒருங்கிணைந்த பிரார்த்தனை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3.50 மணி முதல் 5 மணி வரையும் திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (சு-9)

## கிளைமோர் மீட்பு

வடமராட்சி கோவிற் சந்தை அனிங்காடி பகுதியில் நேற்று 10 கிலோ நிறையுடைய கிளைமோர்க் குண்டு ஒன்றை மீட்டுள்ளதாக இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது. கிளைமோர் மீட்கப்பட்ட இடத்திலிருந்து 2 சைக்கிள்களையும் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-101)

## சிக்கின்குனியா இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

### கோண்டாவிலில்

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள ஞானவீர சனசமூக நிலையத்தில் இலவச விசேட மருத்துவ முகாம் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் டி.எஸ். லெனாட் அறிவித்துள்ளார்.

இந்த மருத்துவ முகாமில் சிக்கின்குனியாவால் பாதிக்கப்பட்டவர்களைப் பரிசோதித்து அவர்களுக்கு இலவசமாக மருந்தும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

இத்துடன் உயர் குருதி அமுத்தப் பரிசோதனை, நீரிழிவு மற்றும் கண் பரிசோதனை, பொது மருத்துவம் ஆகியவையும் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திப் பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### ஆறுகால்மடத்தில்

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை ஆறுகால்மடம் வைத்தியலிங்கம் வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது. இம் மருத்துவ முகாமில் சிக்கின்குனியா நோய் தொடர்பான ஆலோசனையும் மருந்து வகைகளும் வழங்கப்படவுள்ளன.

துறைசார் வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளும் இம் மருத்துவ முகாமில் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தலைவர் ரி.சுதந்திரபாலன் அறிவித்துள்ளார். (சு)


## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### விசேட பொதுக் கூட்டம்

எமது சங்கத்தில் விசேட பொதுக் கூட்டம் தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் 20.12.2006 புதன்கிழமை நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். *நேரம் மு.ப.11 மணி.*

குறித்த நேரத்தில் கூட்டம் நடைபெறும் என்பதால் தவறாது சமுகமளிக்கவும்.

(c-562) ***செயலாளர்.***



## 2007 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தலும் பதிவுகளைப் புதுப்பித்தலும்

யாழ்ப்பாணம் மாநகரசபையினால் 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு ஏதுவாக இக்ராட் (ICTAD) பதிவு பெற்ற VAT வரி செலுத்தும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பதிவினை மேற்கொள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

இதன் பிரகாரம் ஏற்கனவே பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்கள் பதிவுகளைப் புதுப்பிக்குமாறும், புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் *31.12.2006* ஆம் திகதிக்கு முன்னதாக VAT வரி உட்பட ரூபா 1500/= ஐச் செலுத்தி பதிவு செய்து கொள்ள முடியும்.

**(மு.செ.சரவணபவ)**
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.
14.12.2006. (c-558)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### முக்கிய அறிவித்தல்

யாழ்.பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர்களின் வதிவிடப் பிரச்சினை குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. மாணவர்கள் வதிவிட ஒழுங்குகளை தாமாகவே செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுயமாக வதிவிட ஒழுங்குகள் செய்து கொள்ள முடியாத வெளிமாவட்ட மாணவர்களுக்கும், வடமராட்சி, தென்மராட்சியின் சில பகுதிகளையும் தீவகத்தையும் சேர்ந்த மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் விடுதிகளிலும் வேறு இடங்களிலும் தங்குமிட வசதி செய்து கொடுக்க முயற்சித்து வருகின்றது.

ஆகவே மேற்கண்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமக்கு வதிவிட வசதி தேவைப்படின் அதனைத் தொலைநகல் (Fax) மூலம் அல்லது தொலைபேசி மூலம் 21.12.2006 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பீட உதவிப் பதிவாளருக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முழுப் பெயர், கற்கை நெறி, வருடம், சொந்த இடம், முன்னர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த முகவரி ஆகிய விபரங்கள் தரப்பட வேண்டும்.

| பீடம் | தொலைபேசி எண் | தொலைநகல் எண் |
|---|---|---|
| கலை | 021 222 3091 | 021 222 3091 |
| விவசாயம் | 021 222 2973 | 021 222 2973 |
| மருத்துவம் | 021 222 2073 | 021 222 2073 |
| விஞ்ஞானம் | 021 222 2685 | 021 222 2685 |
| முகாமைத்துவக் கற்கைகள் வணிகம் | 021 222 3610 | 021 222 3610 |

பதிவாளர்
15.12.2006. (c-559)


## கடற்றொழிலாளர்களுக்கு கருத்தரங்கு

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தினரால் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை ஊர்காவற்றுறை புனித மரியாள் பாடசாலையில் கடற்றொழிலாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெற[illegible]ள்ளது.

இக் கருத்தரங்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவுமே நடத்தப்படவுள்ளதாக நிறுவன இயக்குநர் அருட் திரு.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்துள்ளார். (சு-72)

## *10 ஆயிரம் கண்ணி வெடிகள் வட-கிழக்கிலிருந்து மீட்பு*

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து 10 ஆயிரத்துக்கும் கூடுதலான கண்ணி வெடிகள் அகற்றப்பட்டிருப்பதாக டென்மார்க் கண்ணி வெடி அகற்றும் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். 2003 ஆம் ஆண்டு இலங்கை அர சாங்கத்துடன்செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய டென்மார்க் நிறுவனத்துடன் இணைந்ததான இந்த அமைப்பு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (சு-9)

மானிட சமுதாயத்தை இழிவுபடுத்தவும் அடிமைப்படுத்தவுமே பயங்கர மூடக் கொள்கை எல்லாம் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

—இங்கர்சால்

வலம்புரி

## பெரியார் சிலையில் எடுக்கும் அக்கறையை ஈழத் தமிழர் விடயத்தில் எடுக்கலாமே

ஸ்ரீரங்கத்துக்கு முன்பாக தந்தை ஈ.வே.ரா. பெரியாரின் சிலையை நிறுவியதும் தமிழ் நாட்டில் இப்போது தந்தை ஈ.வே.ரா.பெரியாரின் சிலை விவகாரம் பூதாகரமாகியுள்ளது.

ஸ்ரீரங்கத்துக்கு முன்பாக தந்தை பெரியாரின் சிலையை நிறுவியதும் அதனைச் சிலர் உடைத்ததும் பிரச்சினைக்கான காரணங்களாகும்.

தமிழகத்தில் பகுத்தறிவின் தந்தை என போற்றப்பட்ட ஈ.வே.ராவின் சிலையை இந்துக்களின் பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படும் ஸ்ரீரங்கத்துக்கு முன்பாக நிறுவியமையே பிரச்சினைக் காரண காரணமாகும்.

கடவுள் இல்லை என்ற கொள்கையை கொண்டிருந்த தந்தை பெரியாரின் சிலையை ஸ்ரீரங்கத்தில் நிறுவுவதை பக்தர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இதனால் இப்போது சிலையை வைப்பதா? விடுவதா? என்ற வாதப் பிரதிவாதத்தால் தமிழ் நாடு மூழ்கிப் போயுள்ளது.

இருப்தோராம் நூற்றாண்டில் சந்திரனில் கல் எடுத்து செவ்வாயில் வீடு கட்ட உலகம் முற்பட்டு வருகின்றபோது தமிழ் நாட்டில் எம் உறவுகள் பெரியாரின் சிலையை வைப்பதிலும் உடைப்பதிலும் முட்டி மோதிக் கொள்கின்றன.

ஈழத் தமிழர்கள் உணவின்றி வாடுகின்றபோது தம் உறவுகளின் உரிமைக்கு ஒரு முடிபைக் கட்ட வேண்டுமென தமிழகத்து மக்கள் போராட்டம் நடத்துவார்களாயின் அது இனத்தின் விடிவுக்கு-வாழ்வுக்கு உதவுவதாக அமையும்.

இலங்கை மண்ணில் கடந்த முப்பது ஆண்டுகளாக யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. யுத்தத்தினால் உயிரிழந்து போனவர்கள் போக இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் பல வருடங்களாக வாடும் மக்களின் அவலம் இன்னமும் நீங்கவில்லை.

இந்நிலையில் ஏ-9 பாதையும் மூடப்பட்டமையினால் உடல், உள ரீதியில் மக்கள் நலிந்து போயுள்ளனர்.

நோர்வே எடுத்த சமாதான முயற்சிகளும் தோல்வியிலேயே முடிபுற்றுப் போயின. ஆக, இனிமேல் இருக்கக் கூடிய ஒரே ஒரு வழி இந்தியாவின் தலையீடு மட்டுமே.

எனினும் சோனியாவைத் தலைவராகக் கொண்ட ஆளும் காங்கிரஸ் இலங்கை விவகாரத்தில் அதிக அக்கறை காட்டும்போல் தெரியவில்லை.

பிரதமர் மன்மோகன் சிங் மென்மையான போக்குடையவர் என்பதும் அவரின் இறுதி முடிபு என்பது சோனியா காந்தியின் முடிபாக இருப்பதாகவும் 'இலங்கை இனப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்து வையுங்கள்' என்பதைத் தவிரவேறு எதுவுமே இந்திய மத்தியரசிடமிருந்து இலங்கைக்கான செய்தியாகக் கிடைக்கப் போவதில்லை.

இதில் ஏதேனும் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் அதற்கு தமிழக மக்களே உதவ வேண்டும். 'ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலை' விவகாரத்தை விடுத்து ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுங்கள். அதுவே காலத்தின் தேவையும் இனத்தைக் காப்பாற்றும் தன்மானச் செயலுமாகும்.

# தூக்குத் தண்டனையை அமுல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பணிப்புரைக்கமைய தூக்குத்தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதற்கான பணிகளை சிறைச்சாலைத் திணைக்களம் பூர்த்தி செய்துள்ளதாக சிறைச்சாலைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேயர் ஜெனரல் வசிர விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தூக்கில் இடுவதற்கான விசேட வகையான கயிறு இந்தோனேசியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர தற்சமயம் வெலிக்கடை மற்றும் போகம்பர சிறைச்சாலையில் தூக்கு மேடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் தற்போது 13 பேர் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்ட நீதியரசர் சரத் அம்பேப்பிட்டியவின் கொலை தொடர்பானவர்கள்.

சுனாமி அனர்த்தத்தின் போது பெண் கொலையுடன் தொடர்புடைய இரண்டுபேர் மற்றையவர்களில் நான்கு பேர் ஒரு குடும்பத்தைக் கொலை செய்தவர்களும் அடங்குவதாகத்தெரிவிக்கப்படுகின்றது. (ச-133)

# 2ஆயிரத்து 300 மெ.தொ. பொருள்கள் இந்தியாவிலிருந்து நேரடியாக யாழிற்கு

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருள்களை இந்தியாவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் அனுப்பி வைக்க இலங்கை அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் இந்த மாதம் 22 ஆம் திகதி மற்றுமொரு தொகுதி உணவுப் பொருள்கள் கப்பலில் ஏற்றப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண தெரிவித்துள்ளார்.

2300 மெற்றிக்தொன் எடை கொண்ட அத்தியாவசிய உணவுப்பொருள் தொகுதிகளை ஏழு கப்பல்களில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கு இலங்கை சுமார் 2500 மில்லியன் ரூபாவை செலவு செய்யவுள்ளது.

இதுவரை அரசு 42 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருள்களையும் ஏனைய இதர பொருள்களையும்வடக்குக்கு அனுப்பி வைத்துள்ளது என அவர் கூறினார். (ச-133)

# அரச அதிபரின் அறிவித்தல்கள்

## நுளம்புத்திரி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சகல குடும்பங்களுக்கும் ஒவ்வொரு நுளம்புத்திரிப் பெட்டி வீதம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக இன்று முதல் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித் துள்ளார்.

ஏற்கனவே வழங்கப்படாத பருத்தித்துறை,புலோலி, புங்குடுதீவு, வேலணை , ஊர்காவற்றுறை ,அனலைதீவு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட மக்களுக்கு மேலதிகமாக ஒரு பெட்டி நுளம்புத்திரி விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒரு பெட்டி நுளம்புத்திரியின் விற்பனை விலை ரூபா 38 என அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

## பால்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் இருப்பிலுள்ள லக்ரோஜன்-1, லக்ரோஜன் -2 நெக்ஸ்பிறே-1+, அங்கர்-1+, அங்கர்-3+ ஆகிய பால்மா வகைகளினை குறிப்பிட்ட வயதுடைய குழந்தைகள் உள்ளகுடும்பங்களுக்கு கட்டுப்பாடின்றி குடும்ப அட்டையில் பதிவு செய்து விநியோகிக்குமாறு அரச அதிபர் க.கணேஷ் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அதேவேளை காசு விற்பனைக்காக வழங்கப்படுகின்ற எந்தப் பொருள்களையும் பொதுமக்களுக்கு நிபந்தனையுடன் விற்பனை செய்ய வேண்டாம் எனவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுக்கு அவர் அறிவித்துள்ளார். (ச)

## யாழ்.உற்பத்திப் பொருள்களை கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் புகையிலை, வெங்காயம், முந்திரிகைப் பழம் போன்ற விளை பொருள்களை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்ப விரும்பும் உற்பத்தியாளர்களை யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவிடம் தொடர்பு கொள்ளும்படி யாழ்.அரச அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

வரும்பொழுது அனுப்ப விரும்பும் பொருள்களின் விபரம், அனுப்புவரின் பெயர், விலாசம், கொழும்பில் இவற்றைப் பொறுப்பேற்பவரின் பெயர், விலாசம் ஆகிய விபரங்களைக் கொண்டு வரும்படியும் கேட்டுள்ளார். (ச)

## றஸ்க் வகைகளை உற்பத்தி செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாண் உற்பத்தி செய்யும் பேக்கரி ஊடாக பேபிறஸ்க், வட்டறஸ்க், மடத்தல்றஸ்க் உற்பத்தி செய்வதற்கு அரச அதிபரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறுஉற்பத்தி செய்யப்படும் மேற்படி பொருள்களுக்கான உற்பத்தி விலையும் அரச அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேபிறஸ்க் 100கிராம்-20ரூபா, வட்டறஸ்க் ஒன்று 2 ரூபா, மடத்தல்றஸ்க் ஒன்று 2 ரூபா 50 சதம். எக்காரணம் கொண்டும் மேற்படி விலைகளுக்கு அதிகமான விலையில் றஸ்க் வகைகளை விற்பனை செய்ய வேண்டாம் எனவும் அறிவித்துள்ளார். (ச)

# கால்நடைத் தீவனங்களில் மோசடி நடவடிக்கை எடுக்க அமைச்சர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் விவசாய உற்பத்திப் பொருள்கள் மற்றும் கால்நடை உற்பத்திகளின் விலைகளைக் குறைக்கவும் அவற்றின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது குடாநாட்டில் விவசாய உற்பத்திப் பொருள்கள் மற்றும் கால்நடை உற்பத்திகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த நிலையில் யாழ்.நகரில் விநியோகிக்கப்பட்டு வருகின்ற உர வகைகள், பூச்சிக் கொல்லிகள், களை நாசினிகள் மற்றும் கால்நடை வளர்ப்பு தீவனங்கள் என்பன விவசாயத்துறை மற்றும் கால்நடை வளர்ப்புத் தொழில்துறை சாராத நபர்களால் பெறப்பட்டு கறுப்புச் சந்தைக்கு வழங்கப்பட்டு அவை அதிக விலையில் விற்கப்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் இனிமேலும் நடக்காதிருக்கும் பொருட்டு விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் தங்களை கிராம சேவைகர்கள் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னரே அவர்களுக்கும் உரம், கிருமி நாசினிகள், களை நாசினிகள் மற்றும் கால்நடைத் தீவனங்கள் என்பன வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.அரச அதிபருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதே நேரம் மேற்படி பொருள்களில் மோசடி செய்யும் நபர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அமைச்சர் யாழ்.அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## வீதி திருத்தக் கோரிக்கை

கோப்பாய் தெற்கு மாதாகோவில் பின் ஒழுங்கை வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வீதியை பெருமளவு விவசாயிகளும் பாடசாலை மாணவர்களும்பயன்படுத்தி வருகின்றனர். எனினும் அதனைத் திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வலி.கிழக்குப் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## மிருசுவில் வடக்கில் குடும்பஸ்தர் கொலை

மிருசுவில் வடக்கில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கொலை செய்யப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த முருகேசு சத்தியநாதன் (வயது-53) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தரின் கொலை தொடர்பாக விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

# அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்கு தமிழகத் தலைவர்கள் இரங்கல்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வை.கோ. மற்றும் ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ: தமழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி இதயத்தில் வேலாகப் பாய்ந்தது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு பெருந்துணையாக விளங்கிய பாலசிங்கம்,தமிழ் இனப்படுகொலை நடத்தும் சிங்கள இனவாத அரசு உலகெங்கும் மேற்கொண்ட பொய்ப் பிரசாரத்தை முறியடித்த சர்வதேச சமுதாயத்தின் மனச்சாட்சியை விழிக்கச் செய்தார்.

1985இல் திம்பு முதல் 2006 ஜெனீவா வரை 21 ஆண்டுகள் தமிழீழத்தின் உரிமைக் குரலாக விளங்கினார். 1987இல் சென்னையிலேயே அவரைக் கொலை செய்ய கைக்கூலிகள் முயன்றனர். 1987 மற்றும் 1988 இல் ஈழத்தில் இராணுவத் தாக்குதலில் பல முறை மயிரிழையில் உயிர் தப்பினார்.

இரு சிறுநீரகங்களும் முற்றிலும் பழுதான நிலையில் நோர்வே அரசு அவரைப் பாதுகாத்து சிகிச்சை அளித்து காப்பாற்றியது. 2000-ம் ஆண்டில் ஜூனில் லண்டனில் அவரோடு தங்கியபோது பரிமாறிக் கொண்ட அனுபவச் செய்திகளும் என் நெங்சிருக்கும் வரை நிலைத்து இருக்கும்.

பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்: சுயமரியாதைக்காகவும் ,அரசியல் உரிமைக்காகவும் போராடும் ஈழத் தமிழர்களுக்கு அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இலங்கை இனச்சிக்கலுக்குப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று உலக நாடுகளின் நெருக்குதல் அதிகரித்து வரும் நேரத்தில் ஈழத் தமிழர்களின் உரிமைக்குரலாய் விளங்கிய பாலசிங்கம் இறந்தது துரதிஷ்டவசமானது.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்: பத்திரிகையாளராக வாழ்க்கையைத் துவங்கி பிரிட்டன் தூதரகத்தில் பணியாற்றியவரும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக திகழ்ந்தவரும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது விடுதலைப்புலிகள் சார்பில் கலந்து கொண்டவரும் சிறந்த அரசியல் மதியுகியுமான அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு இலங்கைத் தமழ்ர்களுக்கு பேரிழப்பாகும்.

திருமாவளவன்:இந்திய மண்ணில் தங்கி சிகிச்சை பெறவிரும்பிய அவரை இந்திய எல்லைக்குள் அனுமதிக்க முடியாது என்று அரசு மறுதலித்த, மனிதநேயமற்ற அணுகுமுறையை எண்ணி இந்தச் சூழலில் வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட மனித நேய அடிப்படையிலான ஒரு ஜனநாயகப்பாதுகாப்புக்கானது என்பதை சர்வதேச அரங்கில் நிலைநாட்டிய வல்லமை வாய்ந்த அவரது இழப்பு தமிழர் வாழ்வில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். (ச)

## புலமைப்பரிசில் பரீட்சை வாகரையில் நாளை

(வாகரை)

வாகரை மற்றும் கதிரவெளிப் பகுதிகளில் பாதுகாப்புக் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை நாளை நடத்தப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. இப் பரீட்சைக்கு 225 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

எனினும் போதுமான பாதுகாப்பு இல்லாத பட்சத்தில் பரீட்சை மீண்டும் பிற்போடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு

யாழ்.பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் அவ் விடயத்திலே பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு வேண்டிய ஒத்துழைப்பை மாணவர்கள் தரப்பிலிருந்து வழங்குவதும் குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (ச)

# பொருத்தமான அரசியலமைப்பின் மூலமே வடக்கு-கிழக்குப்பிரச்சினையை தீர்க்கலாம்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையில் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்காவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவை சந்தித்து உரையாடியதன் பின்னரே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் நடவடிக்கைகளுக்கான செயலாளர் திக்கலஸ் வெம்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சிகள் இரண்டிற்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாக வடக்கு கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை கைநழுவ விட்டால் அது இலங்கையின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் இரு பிரதான கட்சிகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியவற்றிலேயே சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலம் தங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து அரசியல் ரீதியான தீர்வு குறித்த யோசனைகளை தயாரிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து குறித்த யோசனைகளை விடுதலைப்புலிகளுக்கு சமர்ப்பித்து அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-9,133)

## அதிமுக்கியமான...

ஆரம்பிக்கப்பட்டுவதற்கு தவிர்க்க முடியாத காரணமாக அமைந்தது.

இந்த போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னணி வகித்தது. பாலசிங்கம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தத்துவாசிரியராகவும், அரசியல் நிபுணத்துவ ஆலோசகராகவும் திகழ்ந்தார்.

விடுதலைப்புலிகளுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் அவர்களைப் பிரதிநிதித்துப்படுத்தி முக்கிய பங்காளராகவிருந்தார். அரசினால் தமிழ் மக்கள் மீது முழுமையாகவும் தொடராகவும்,விதிக்கப்பட்ட சமமின்மையையும் அநீதிகளையும் அன்ரன் பாலசிங்கம் நன்றாக புரிந்திருத்தார்.

தமிழ் மக்கள் சாத்வீக ரீதியாக நடத்திய போராட்டங்களின் போது அவர்கள் மீது ஒட்டுமொத்தமாக கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் நன்கு அறிந்திருந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் ,இலக்குகள் சம்பந்தமாக அவருக்கு தெளிவான விளக்கம் இருந்தது. இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழ் மக்கள் சார்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் கருத்துக்களை முன்வைக்கும் வல்லமையை பாலசிங்கம் அவர்கள் முழுமையாகப் பெற்றிருந்தார்.

அன்னாரின் அன்புத் துணைவி திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் ஒவ்வொரு விதத்திலும் அவருக்கு உதவும் சக்தியாகத் திகழ்ந்தார்.

திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (எ-5)

## கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின்...

அமரர் அன்ரன் பாலசிங்கத்தை நூறு தடவைக்கு மேலாக தான் சந்தித்து இலங்கையின் சமாதானத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஏடுத்துள்ளதாக எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அன்ரன் பாலசிங்கம் இலங்கையில் நிரந்தர தீர்வொன்று காணப்படவேண்டும் என்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியை மேற்கொண்டதாக அந்த செவ்வியில் தெரிவித்த எரிக்சொல் ஹெய்ம் அவர் எந்த கால கட்டத்திலும் உண்மைக்கு புறம்பான செயற்பாடு எதிலும் ஈடுபடவில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மரணமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் அவ்வரை தான் லண்டனில் சந்தித்தபோது அவர் தற்போதைய இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தனது கவலையை பெருமளவில் வெளியிட்டிருந்ததாகவும் கூறினார்.

கடைசியாக கடந்த வாரம் லண்டனில் அவரைச் சந்தித்த போது தான் உயிர் வாழப் போவது இன்னும் ஒருசில வாரங்களே என தனக்கு தெரிவித்ததாகவும் செவ்வியில் தெரிவித்தார். (ச-133)

## தன்னை...

யில் அமைதி தழைத்திட விரும்பிச் செயற்பட்ட நம்போன்றவரிடமும், நோர்வே நாட்டினரிடமும் நட்புணர்வு கொண்டு நாளும் உழைத்தவரும் , அறிவிற் சிறந்த வரும், ஆற்றலாளரும்,அன்பின் உருவமா கத் திகழ்ந்தவரும்,இறுதியாக இமைக் கதவு கள் மூடும் வரையில் ஈழத்தின் சுயமரியா தை சுடரொளியை அணையாமல் பாதுகாத்தவருமான என்னரும் நண்பர் பாலசிங்கம்.

அவரது மறைவுச் செய்தியைப் பலகாலம் அவருடன் பழகிய என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரை இழந்து தவிக்கும் நண்பர்களுக்கும் அவரது அன்புத் துணைவியாருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (ச)

## வன்னியில்...

கள் எதிர்வரும் புதன்கிழமை லண்டனில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது துணைவியாரோடும், விடுதலைப் புலிகளின் தலைமையோடும் இறுதீ நிகழ்வுகள் பற்றிக்கலந்தாலோசித்த பின்னர் முடிவான தகவல்கள் எடுக்கப்பட் டுள்ளதாக ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித் துள்ளனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை மலர்ச்சாலை ஒன்றில் வைக்கப்படும் அவரது பகமுடல் புதன்கிழமை லண்டன் அலெக்சாண்டிரா மாளிகை மண்டபத்தில் மக்களின் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்படும்.

அன்றைய தினம் தமிழர் தாயகப் பகுதியில் பிற்பகல் நான்கு மணிக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படும். தேசத்தின் குரலின் இறுதி நிகழ்வில் நோர்வேயின் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் உட்பட பிரமுகர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-5)

## இடம் பெயர்ந்த மக்கள்...

வாகரையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதலில் அகப்பட்ட நிலையில் இடம் பெயர முயன்ற மக்களின் வள்ளங்களே சீரற்ற கால நிலை காரணமாக கடலிலும் ,ஆற்றிலும் மூழ்கியதில் குழந்தைகள் ,பெண்கள் உட்பட சுமார் 13 பேர் வரை கொல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட வாகரைப் பிரதேசத்தில் தொடருகின்ற எறிகணை வீச்சுக்களை அடுத்து பாதுகாப்பு தேடி அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்று கொண்டிருந்தவர்களே இவ் விபத்திற்குள் சிக்கியுள்ளனர்.

வாகரைக் கடலில் வள்ளமொன்று விபத்துக்குள்ளானதில் 2 பெண்கள் உட்பட 3 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதில் பயணம் செய்த 4 பேர் காப்பாற்றப்பட்டு வைத்திய சாலையில்சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதிலிருந்த மூன்று குழந்தைகள் ஒரு சிறுவன் உட்பட நான்கு பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். வாழைச்சேனைக்கு அருகில் இடம் பெற்ற 2 வது விபத்து சம்பவத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்கள் என அஞ்சப்படுகின்ற போதிலும் இதுவரை 4 சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர மற்றுமொரு சம்பவத்தில் வெருகலுக்கு மேற்கு பகுதியில் வள்ளமொன்று ஆற்றில் மூழ்கியதில் 3 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்கள் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகரைக்கான தரைவழிப்பாதை இராணுவத்தினரால் பாதுகாப்பை காரணம் கூறி மூடப்பட்டுள்ள நிலையில் அங்கிருந்து மக்கள் வெளியேறி காட்டுப் பாதை மற்றும் கடல் வழியாக தினமும் நூற்றிற்கு மேற்பட்டோர் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிக்கு இடம் பெயர்கின்றனர்.

வாகரையிலிருந்து இடம் பெயரும் மக்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் படகுகளில் ஏற்றி வாழைச் சேனைக்கு கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது. (ச-133)

MA,MCom,MBA,Msc,Mphill,BA,Bsc

காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை)

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் கவனத்திற்கு!

! மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் 26.12.2006இல் ஆரம்பமாகின்றன.

! இப் பரீட்சைகள் யாவும் காமராஜர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

! பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் தங்கள் அனுமதி அட்டைகளை 20.12.2006க்கு முன்னர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

காமராஜர் பல்கலைக்கழகம்
(மதுரை)
யாழ்.இணைப்பாளர்.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.PNo.222 8148, 222 3208

(C-557)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.